# என்.டி.ஆர். எங்கே போகிறார்?

விஜயவாடா அனல் மின் நிலையத்தின் மலையுச்சி மாளிகை வரலாற்று முக்கியத்துவம் உடையதாகி விட்டது.

பிரதமர் இந்திரா காந்தி ஜனவரி மாதத்தில் ஆந்திர தேர்தலில் பிரசாரம் செய்ய வந்தபோது இந்த மாளிகையிலிருந்துதான் தன் பிரசாரப் பயணத்தைத் தொடங்கினார். இந்திராவின் கட்சியிடமிருந்து ஆட்சியைப் பறித்துக் கொண்ட என். டி. ராமராவ், இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பு அணியின் முதல் ரகசிய சந்திப்புக் கூட்டத்தையும் இதே மாளிகையில் சென்ற வாரம் நடத்தினார்.

இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் பட்டியலைப் பார்க்கும் எவரும் ஒரு கணம் ராமராவின் முயற்சி வெற்றியடைந்து விட்டதாகவே கூடக் கருதக்கூடும். அப்படி ஒரு விநோதமான கலவை.

தமிழக முதலமைச்சர் அ. தி. மு. க. தலைவர் எம். ஜி. ஆரிலிருந்து காஷ்மீர் முதலமைச்சர் ஃபரூக் அப்துல்லா வரை 14 கட்சிகளைச் சேர்ந்த 24 பேர் சந்தித்து 5 மணி நேரம் பேசியிருக்கிறார்கள்,

இத்தனை பேரும் வெறுமனே மாறுபட்ட கொள்கைகளை, வழிமுறைகளை உடைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, இவர்களில் நாட்டு நலனைப் பற்றிச் சிந்திக்கிறவர்களும் இருக்கிறார்கள். பதவி ஆசை மட்டுமே கொண்டவர்களும் உண்டு; ஆட்சி அதிகார பலத்தை உடைய இந்திரா காங்கிரசுக்கு எதிராகத் துளியும் விட்டுக் கொடுக்காமல் போராடியவர்களும் உண்டு. சமயத்துக்கேற்றபடி இந்திரா காங்கிரசுக்கு வளைந்து கொடுக்கும் ரப்பர் முதுகெலும்பர்களும் உண்டு. இந்திரா காந்தியின் நல்ல கொள்கைகளைத் திசை திருப்பிக் கெடுத்ததே சஞ்சய் காந்திதான் என்று கூறி வந்தவர்களும் இந்தக் கூட்டத்திற்கு வந்தார்கள். சஞ்சய் காந்தியின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கென்றே கட்சி ஆரம்பித்துள்ள மேனகாவும் வந்தார்.

இப்படிப்பட்ட விசித்திரமான நெல்லிக்காய்களைக் கொண்டு மூட்டை கட்டும் என். டி. ஆரின் நோக்கம்தான் என்ன? ஆந்திராவில் ஆட்சியைப் பிடித்தாயிற்று. அடுத்தது என்ன? அவர் எங்கே போகிறார்? இலக்கு என்ன?

டெல்லியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், இந்திராவுக்கு மாற்றுத் தலைவராகத் தன்னைத்தானே பிற எதிர்க் கட்சிகள் என்ற ஜாக்கி வைத்து உயர்த்திக் கொள்வதும்தான் என். டி. ஆரின் நோக்கம் என்று சில அரசியல் விமரிசகர்கள் கூறுகிறார்கள்.

இன்றைய நிலையில் என். டி. ஆருக்கு அந்த மாதிரியான நோக்கம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியே இருப்பதானாலும்கூட முதலில் ஆந்திராவில் தன் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொண்டு, ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளாமல், அடுத்த கட்டத்தைப் பற்றி என். டி. ஆர். யோசித்துக்கூடப் பார்க்க முடியாது என்பதுதான் நிலைமை.

அப்படியானால் என். டி. ஆர். எதற்காகத் தேசிய அளவில் இந்திரா காங்கிரசுக்கு மாற்று அணியை உருவாக்குவது பற்றிக் கவலைப்பட வேண்டும்?

இந்தக் கேள்வியிலேயே பதிலும் அடங்கியிருக்கிறது. மாநில ஆட்சியில் தொடர்ந்து தான் இருப்பதற்கும் கூட இந்திரா காங்கிரஸினைப் பலவீனப்படுத்தியே ஆகவேண்டும் என்ற நிலையில் தான் என். டி. ஆர். இருக்கிறார். மத்திய அரசு , இ.காங்கிரஸ் வசம் உள்ள நிலையில் என். டி. ஆரின் கவலை இயற்கையானதுதான்.

இதற்கு முன்பு தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியும் சரி, அ.தி.மு.க. ஆட்சியும் சரி, இரண்டுமே மத்தியிலுள்ள இந்திரா காங்கிரஸ் ஆட்சியால் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் காங்கிரஸ் மிகவும் பலவீனமாக இருந்த நிலையிலேயே இப்படி நடந்தபோது, ஆந்திரத்தில் காங்கிரஸ் அவ்வளவு மோசமாக இல்லாத நிலையில் எதுவும் நடக்கலாம் என்று என். டி. ஆர். கவலைப்பட இடமிருக்கிறது.

இதைத் தவிர மாநிலத்தில் சரியான முறையில் ஆட்சியை நடத்தப் போதுமான நிதி வசதிகளும் அதிகாரங்களும் இல்லாத நிலையில் மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியும் அதிக அதிகாரமும் கேட்பது ராமராவுக்கு மற்றொரு முக்கியமான விஷயமாகும். மேற்கு வங்காளத்தில் ஆட்சியைப் பிடித்த பிறகு மார்க்சிஸ்ட் கட்சியும் தன் அரசின் சாதனைகளை டாக்குமெண்டரி படங்களாகத் தயாரித்தபோது, அந்தப் படங்களின் இறுதியில், “இப்போதுள்ள அதிகாரங்களைக் கொண்டு இவ்வளவுதான் செய்ய முடிகிறது. எனவே, மேலும் அதிகமான அதிகாரங்கள் மாநில அரசுக்குத் தேவை என்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்” என்று தெளிவாகப் பிரசாரமும் செய்திருக்கிறது.

இதே ரீதியில் தான் என். டி. ராமராவும் முன்கூட்டியே தன் மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஆரம்பித்திருக்கிறார். அவருக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலையும் அமைந்திருக்கிறது. அஸ்ஸாம் போராட்டமும், பஞ்சாப் அகாலிதளக் கிளர்ச்சியும் மாநில சுயாட்சிக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பித்தவைதான். இந்தக் கிளர்ச்சிகள் வலுவடைந்துள்ளன. மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸை எதிர்த்து அணி திரட்டவும், மாநில சுயாட்சிக்கு கோரிக்கையைப் பலமாக முன் வைக்கவும் இதைவிடச் சரியான சூழ்நிலை வேறென்ன இருக்க முடியும்?

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள பிற கட்சிகள் தயாராக இல்லாத நிலையிலும், சில கட்சிகள் தயங்குகிற நிலையிலும், என். டி. ஆர். முந்திக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இதில் அவர் காட்டிய அவசரம் பல தவறுகளுக்குக் காரணமாகிவிட்டது.

இந்திரா காங்கிரசுக்கு மாற்று அணி அமைப்பது பற்றி ஆலோசிக்கப் போவதாக முதலில் அறிவித்த என். டி. ஆரால் கடைசியில் மாற்று அணி பற்றித் தெளிவாக எந்த முடிவுக்கும் மற்றவர்களைக் கொண்டுவர முடியவில்லை. விஜயவாடா கூட்டத்தை இன்னொரு **NAM (Non-Aligned Meet** அல்ல **! National Alternative Meet)** என்று வர்ணித்த பத்திரிகைகளும் ஏமாந்தன.

இந்திரா காங்கிரசுக்கு மாற்று அணியை உருவாக்குவது என்ற விஷயத்திலேயே விருப்பம் இல்லாதவர்களும் கூட்டத்தில் இருந்தார்கள். எம்.ஜி.ஆரைப் பொறுத்தமட்டில் அவர் 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கோருவது என்ற விஷயத்தைத் தாண்டி வேறெதற்கும் செல்ல விரும்பவில்லை.

மத்திய அரசுடன் மோதுவதைவிட சிநேகத்தோடு இருப்பது மேல் என்ற ரீதியில் அவர் பார்வை அமைந்தது.

கூட்டத்தில் பங்கேற்ற வேறு சிலருக்கு இந்தச் சந்திப்பின் வாயிலாக இந்திராவுக்குப் பூச்சாண்டி காட்டித் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள முடியுமா என்பதில் மட்டும் அக்கறை இருந்தது. இந்தப் பிரிவில் வெவ்வேறு தரத்தில் ஜெகஜீவன்ராம், பஹுகுணா, ஃபரூக் அப்துல்லா ஆகியோரைச் சேர்க்கலாம்.

என்.டி.ஆரின் அவசரத்தால் ஏற்பட்ட முக்கியமான தவறுகள் இரண்டு. முதல் தவறு, சர்வ கட்சிக் கூட்டத்தில் விவாதிப்பதற்கான விஷயங்களை முன்கூட்டித் தீர்மானம் செய்யாததாகும். தெளிவாக விஷயங்களைப் பட்டியலிட்டு முதலிலேயே எல்லாக் கட்சிகளுக்கும் அனுப்பிவிட்டுப் பிறகு விவாதத்தை நடத்தியிருந்தால் விளைவுகளும் வழவழ என்றிருந்திருக்காது.

இரண்டாவது தவறு, இந்தச் சந்திப்புக்கு எந்தெந்தக் கட்சிகளை அழைப்பது என்பது பற்றித் தெளிவில்லாமல் அழைத்ததாகும். கேரளத்தில் உள்ள பல்வேறு மாநிலக் கட்சிகளுக்கும், தமிழ்நாட்டில் தி.மு.க-வுக்கும் அழைப்பு இல்லை.

தி.மு.க--வை அழைக்காததற்குக் காரணம், இந்திரா காங்கிரசுடன் அதற்கு உறவு இருப்பதுதான் என்று முதலில் கூறப்பட்டது. அதே சமயத்தில் பாண்டிச்சேரியில் இந்திரா காங்கிரஸ்-தி.மு.க, கூட்டணி அரசின் முதலமைச்சருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அரசியல் ரீதியான சந்திப்பில் தென்மாநில முதல்வர் என்ற அடிப்படை பொருந்தி வரவில்லை. இதற்குப் பிறகு வேறொரு விளக்கமும் என்.டி.ஆரால் தரப்பட்டது, "இதுவரை அந்தக் கட்சியோடு தொடர்பு ஏற்படாததால் அனுப்பவில்லை. அவ்வாறுதான்" என்று சொன்னார்.

ஆனால் இதுவரை தொடர்பு இல்லாத அகாலிதளத்துக்கு அழைப்பு எப்படிப் போயிற்று? என்.டி.ஆர். ஏற்பாடு செய்யும் கட்டம் பற்றிப் பத்திரிகைச் செய்தி வாயிலாக கசிந்ததும், அவர்களே தொடர்பு கொண்டார்கள் என்பதுதான் பதில்.

மேனகா காந்தியை என். டி. ஆர். அழைத்திருந்ததும் ஜனதா கட்சி உட்பட பலருக்குச் சங்கடமாகவே இருந்தது.

இப்படிப்பட்ட சிக்கல்களினால் விஜயவாடாவில் நடந்த எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் உருப்படியான விளைவுகளைச் சாதிக்க என்.டி.ஆரால் முடியவில்லை. அந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் — என். டி. ஆர். நிகழ்த்திய தொடக்க உரையும், கூட்ட முடிவில் எல்லாருமாக இணைந்து நிறைவேற்றிய தீர்மானங்களும் இதை நிரூபிக்கின்றன.

என். டி. ஆர். பேச்சில் 35 வருடங்களாக ஒரே கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்து நாட்டைக் குட்டிச்சுவராக்கி விட்டதாகச் சொன்னதில் இருந்த கடுமை, தீவிரம் எல்லாம் இறுதித் தீர்மானங்களில் இல்லை. எதிர்க்கட்சிகள் இருப்பதையே தவறு என்ற ரீதியில் பிரதமர் பேசுவது பொறுப்பற்றது என்ற வாக்கியமும் மக்களின் பிரச்னைக்குச் சரியான தீர்வுகளைக் காண ஆளுங்கட்சி தவறி விட்டது என்ற வாக்கியமும்தான் இருப்பதிலேயே 'கடுமையானவை'. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். சர்க்காரியா கமிஷன் விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளையடுத்து வந்த தீர்மானத்தில் மத்திய அரசுடன் எந்த மோதலும் அவசியமில்லை என்று கூட்டம் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆக மொத்தத்தில், சர்வ கட்சிக் கூட்ட தீர்மானங்களில் தேறக்கூடியதாக மிஞ்சியது மாநிலங்களுக்கு நிதிப்பகிர்வு பற்றி மறுபரிசீலனை நடத்தவும், அதிக அதிகாரம் தருவது பற்றியும் வற்புறுத்தியதுதான். இதுவும் ஏற்கெனவே என்.டி.ஆர். பதவிக்கு வந்ததிலிருந்து பேசி வந்ததுதான்.

இந்தக் கோரிக்கையைக்கூட நடைமுறையில் நிறைவேற்ற ஏதாவது செயல் திட்டம் உண்டா? என்.டி.ஆர். பதில் இதுதான்:- மீண்டும் மீண்டும் கூடிப் பேசுவோம்.

சரி, மத்திய அரசுக்கு இந்தக் கோரிக்கைகளைத் தெரிவித்து சர்வகட்சி சார்பில் அதிகாரபூர்வமான கடிதம் ஏதாவது எழுதுவீர்களா?

**என்.ஆர்.டி., பதில்:** கடிதம் எதற்கு? நாளை பேப்பரில் செய்தி வரும். அதை பார்த்து மத்திய அரசு தெரிந்து கொள்ளுமே! ஏன் கடிதம் எழுத வேண்டும்?

பத்திரிகைகளில் செய்தி வரவழைப்பது என்ற அளவில் என்.டி.ஆருக்கு வெற்றி கிடைத்துவிட்டது. லண்டன் டெலிவிஷன் உட்பட, பல்வேறு செய்தி ஸ்தாபனங்கள், பத்திரிகைகள் 100 பேரை அனுப்பி வைத்திருந்தன. வெறும் கட்சி மாநாடு மட்டும் நடத்தியிருந்தால் யாரும் வந்திருக்க மாட்டார்கள்.

மாநில சுயாட்சி என்பதோ, அதிகாரங்களைக் குவிக்காமல் பகிர்ந்து கொள்வது என்பதோ, ஜனநாயகச் செயல்முறையோடு மட்டுமே சம்பந்தம் உள்ளவை. இவற்றை நிறைவேற்ற ஜனநாயகப் போக்கு, மனோபாவம் தேவை. இந்திரா காந்தியிடம் இந்தப் போக்கும் அணுகு முறையும் இல்லை என்று ஆதாரங்களோடு சுட்டிக் காட்டப்படுகிற அதே வேளையில் என். டி.

ராமராவிடம் இந்தக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய விஜய வாடாவில் நடந்த கட்சி நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

தெலுங்கு தேசம் கட்சி தொடங்கப்பட்டு ஓராண்டாகிறது. கட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. ஆனால் கீழ்மட்டத்துடன் தேர்தல் நிறுத்தப்பட்டது. நிர்வாகக் குழு தேர்தல் ரத்து செய்யப்பட்டு என். டி. ஆரிடமே நியமிக்கும் அதிகாரம் தரப்பட்டது. கட்சி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்காமல், நியமிப்பதுதான் ஏற்கெனவே காங்கிரசிலும் அ.தி.மு.கவிலும் உள்ள கோளாறாகும். அதே தவறு தெலுங்கு தேசக் கட்சியிலும் செய்யப்பட்டுள்ளது.

வெகு சீக்கிரத்தில் இந்த முறையிலிருந்து மாற்றிக் கொள்ளாவிட்டால் கட்சிக்குள், உள் கட்சி ஜனநாயகமே இல்லாமல் என். டி. ஆரே எல்லாம் என்றாகிவிடும். (பொதுக் கூட்டத்தில் பேசிய பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட 'என். டி. ஆர்-தான் தெலுங்கு தேசம், தெலுங்கு தேசம்தான் என்.டி.ஆர்.' என்று பேசினார்கள்! இந்திராவே இந்தியா, இந்தியாவே இந்திரா என்பதற்கும் இதற்கும் துளியும் வித்தியாசம் கிடையாது.)

“ஊழலை ஒழித்து, லஞ்ச லாவண்யங்களை நசுக்கி நேர்மையும் சத்தியமும் நிலை பெறச் செய்வதற்காக” 301-வது வேடம் தாங்கியுள்ள என்.டி.ஆர். மீது ஏற்கெனவே ஊழல் குற்றச்சாட்டுக்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. ஹைதராபாதில் என். டி. ஆரின் மகன் ஜெயகிருஷ்ணாவுக்கு தியேட்டர்கள் கட்ட அனுமதி தருவதற்காக விதிகளே மாற்றியமைக்கப்பட்டிருப்பது ஒரு குற்றச்சாட்டு. கல்லூரிகளில் நன்கொடைத் தொகைகளை வாங்குவதை முழுக்க ஒழிக்கப் போவதாகக் கூறிய என்.டி.ஆர். இப்போது சில சதவிகிதம் சீட்டுக்களைக் கல்லூரி நிர்வாகத்தின் விருப்பத்துக்கு ஒதுக்கப் போவதாக மாற்றி அறிவித்திருக்கிறார். இடையில் நடந்த லஞ்ச பேரம்தான் மாற்றத்துக்குக் காரணம் என்பது மற்றொரு குற்றச்சாட்டு.

இந்தச் சூழ்நிலையில் என் டி.ஆர். தன்னை நேர்மையானவர் என்றும், ஜனநாயகவாதி என்றும் நடைமுறையில் நிரூபிப்பதிலேயே அவருடைய எதிர்காலம் அடங்கியிருக்கிறது.

தமிழகச் சூழ்நிலையை ஒப்பிட்டு, என்ன செய்தாலும் மங்காத செல்வாக்குடன் எம். ஜி. ஆர். விளங்குவதைப் போல என்.டி.ஆரும் நீடிப்பார் என்று சிலர் கருதுகிறார்கள். இது சாத்தியமல்ல. தெலுங்கு தேசக் கட்சி தொடங்கிய போது காணப்பட்ட ஆதரவும் உற்சாகமும் ஆட்சிக்கு வந்தபின் அதே அளவில் தொடரவில்லை என்பது விஜயவாடாவில் தெரிந்தது. என்.டி. ஆரின் ஆதரவாளர்கள் அவரைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கக் கூடியவர்களாகத் தெரியவில்லை. உண்மையில் என் டி. ஆரின் வெற்றி எம்.ஜி.ஆரின் வெற்றியோடு ஒப்பிடக்கூடியதே அல்ல.

1967-ல் தமிழ்நாட்டில் காங்கிரசிடம் வெறுப்புற்று மாற்றுத் தீர்வாக தி.மு.க-வை மக்கள் ஆட்சியில் அமர்த்திப் பார்த்தது போலவே, ஆந்திரத்தில் மக்கள் என். டி. ஆரை அமர்த்தியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர், என்.டி.ஆர். ஒத்துமைகள் இருவரும் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவர்கள் என்பதோடு முடிந்து விடுகிறது.

என்.டி.ஆர். தன் மீது மக்கள் வைத்துள்ள எதிர்பார்ப்புகளுக்கேற்ப நடக்காவிட்டால் நிலைமை தலைகீழாகிவிடும். இதை அவரும் உணர்ந்திருக்கிறார் என்ற விஷயம்தான் எதிர்காலத்தில் என்.டி.ஆர். முழுமையான ஜனநாயகவாதியாகச் செயல்பட்டுத் தன்னை நிரூபித்துக் கொள்ளுவார் என்ற நம்பிக்கைக்கு வாய்ப்பளிக்கிறது. அப்போது தேசிய அளவில் மாற்று அணிக்கு அவருடைய தலைமையும் பயன்படலாம்.

அப்படியானால் விஜயவாடா விவாதத்தால் பயனே கிடையாதா? அப்படி மொத்தமாக, நிராகரித்து விட முடியாது.

விதை போடப்பட்டிருக்கிறது. அகலமாக, அவசரமாகக் கொத்தி ஆழமாக உழாமல் போட்டிருக்கிறார்கள். இனிமேல் போடுகிற உரமும் தண்ணீரும் அதை விளைய வைக்கலாம்.

-----ஞாநி